செய்தி வெளியீட்டு எண்.59 நாள். 27.01.2017

# திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக தத்தெடுக்கும் முறையை தடுக்கும் விதமாக அமைக்கப்பட்ட விழிப்புணர்வு பலகையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

-------

திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக தத்தெடுக்கும் முறையை தடுக்கும் விதமாக அமைக்கப்பட்ட விழிப்புணர்வு பலகையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.01.2017) திறந்து வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து அரசு/தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக குழந்தை தத்தெடுத்தல் முறையை தடுக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 18 வயதிற்குட்பட்ட சிறுமிகள் மகப்பேறுக்கு மருத்துவமனைக்கு வந்தாலோ அல்லது பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் இருப்பினும் உடனடியாக திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கும், குழந்தைகள் நலக்குழுவிற்கும் தகவல் தெரிவிக்குமாறு, அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மத்திய தத்தெடுத்தல் வள முகமை வழிகாட்டுதல் மற்றும் இளைஞர் நீதிச்சட்டம் 2015-ன் படி மட்டுமே குழந்தை தத்தெடுத்தல் செய்யப்பட வேண்டும் என்பதை அனைத்து மருத்துவமனைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள 12 அரசு பொது மருத்துவமனைகளில் இவ்விழிப்புணர்வு பலகையை பொறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக விளம்பர பலகைகள் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக முதற்கட்டமாக திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நீதிக்குழும தலைவர்/முதன்மை நடுவர் எண்.1 திருமதி.எ.வி.சுபாஷினி அவர்கள், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி.கார்குழலி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.ப.செந்தில், நன்னடத்தை அலுவலர் திரு.ஏகாம்பரம், குழந்தைகள் நலக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**